DEPOSITION OF WITNESS

IN THE COURT OF I ADDL.DISTRICT & SESSIONS JUDGE, THOOTHUKUDI.

Case No. S.C.No.301/2020.

Prosecution witness for P.W.1.

| | | | |
|---|---|---|---|
| Name | ... திரு. மகேந்திரன். | Caste | ... |
| Father's/Husband Name | ... | Calling | ... |
| Village | ... | Religion | ... |
| Taluk | ... | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 09.09.2024.

A6 died. Others present.

முதல் விசாரணை

நான் தற்போது ஓட்டப்பிடாரத்தில் குடியிருந்து விவசாய கூலி வேலை செய்து வருகிறேன். இந்த வழக்கில் இறந்துபோன மாரியப்பன் என் தகப்பனார். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். 27.12.2019 அன்று காலை சுமார் 10 மணியளவில் நான் என் வீட்டில் இருந்தேன். அப்போது எங்கள் ஊரில் ஊராட்சி மன்ற பதவிகளுக்கு போட்டியிடும் உறுப்பினர்களின் கூட்டம் சிவன்கோவில் முன்பாக நடந்தது. எதிரிகள் தரப்பில் ஆரோக்கிய ரவி(5ம் எதிரி) என்பவருக்கும், இளையராஜா என்பவர் தரப்பில் பச்சைப்பெருமாள் என்பவருக்கும் வாய்த்தகராறு ஏற்பட்டது. அப்போது என் தகப்பனார் 5ம் எதிரியை பார்த்து சத்தம்போடுகிறார். அப்போது 5ம் எதிரி வெளியூர்காரரான இளையராஜாவிற்கு சப்போர்ட் செய்கிறீர்களா உள்ளூர்காரரான 1ம் எதிரிக்கு ஏன் சப்போர்ட் செய்யவில்லை என்றும் கேட்டு உங்களை ஒரு கை பார்க்கிறேன் என்று 5ம் எதிரி என் தகப்பனாரை மிரட்டிவிட்டு சென்றார். அது குறித்து அன்று மாலையில் என் தகப்பனார் என்னிடம் சொன்னார். அதனால் நான் என் தகப்பனாரிடம் உள்ளாட்சி தேர்தலில் இளையராஜாவிற்கு சப்போர்ட்டாக இறங்கி வேலை செய்யப்போகிறவர்களை கொலை செய்யப்போகிறார்கள் என்று நான் என் தகப்பனாரை எச்சரித்தேன். 30.12.2019 அன்று உள்ளாட்சி தேர்தல் நடந்தது. அப்போது முப்புலிவெட்டியைச் சார்ந்த கம்யூனிஸ்ட் கட்சி சேர்ந்த கே.பி. ஆறுமுகம் சார்பாக நான் டிஎம்பி மெக்கவாய் மேல்நிலைப்பள்ளியில் பூத் ஏஜெண்டாக நான் உள்ளே சென்றேன். வாக்குபதிவு நடந்து கொண்டிருக்கும்போது மாலை சுமார் 5 மணியளவில் மேட்டூர் கிராமத்தில் இருந்து வாக்களிக்க வந்த மக்கள் 1ம் எதிரி, பச்சைப்பெருமாள், ஜெயமுருகன், சண்முகசுந்தரம்(2ம் எதிரி), ராமகிருஷ்ணன் என்ற ராமசாமி (3ம் எதிரி) ஆகியோர் மாறி மாறி வெட்டிக் கொண்டார்கள் என்று சொன்னார்கள். அதனால்

நான் பதற்றப்பட்டு பூத்திலிருந்து வெளியே வந்தேன். என் தகப்பனார் எங்கிருக்கிறார் என்று தேடினேன். பச்சைப்பெருமாள், ஜெயமுருகன் ஆகியோர் வெட்டுபட்டு மருத்துவமனையில் இருப்பதாக கேள்விப்பட்டு ஓட்டப்பிடாரம் வ.உ.சி அரசு மருத்துவமனைக்கு சென்றபோது என் தகப்பனார் மருத்துவமனை முன்பாக நின்று கொண்டிருந்தார். அப்போது எதிரிகள் அனைவரும் மருத்துவமனைக்கு வந்தார்கள். அப்போது 1ம் எதிரி என் தகப்பனாரை பார்த்து இந்த பிரச்சனைக்கெல்லாம் இவன்தானே காரணம் என்றும் தேவ்டியா பையன்தான் காரணம் என்றும், இவனை வெட்டி கொல்லுங்கடா என்று 1ம் எதிரி சொல்லும்போது 2 முதல் 8 எதிரிகள் அரிவாளுடன் என் தகப்பனாரை விரட்டி சென்றார்கள். என் தகப்பனார் உயிருக்கு பயந்துகொண்டு திருநெல்வேலி சாலையில் ஓடும்போது 2 முதல் 8 எதிரிகள் அரிவாள் மற்றும் கம்பு ஆகியவற்றால் தாக்கினார்கள். 4, 5, 8 எதிரிகள் அரிவாளுடன் என் தகப்பனாரின் தலையில் தாக்கினார்கள். 7, 3, 6 எதிரிகள் தங்கள் கையில் வைத்திருந்த கம்பால் என் தகப்பனாரின் தலையில் தாக்கினார்கள். 2 முதல் 8 எதிரிகள் தாக்குவதற்கு முன்பாகவே இத்தோடு செத்து தொலைடா என்று தாக்கினார்கள். என் தகப்பனார் சரிந்து கீழே விழும்போது 2ம் எதிரி என் தகப்பனாரை காலால் எட்டி உதைத்து செத்தான்டா மாரியப்பன் வாங்கடா நாம் சென்றுவிடுவோம் என்று சொல்லி அனைவரும் அங்கிருந்து ஓடிவிட்டார்கள். அது குறித்து நான் போலீசில் எழுத்து மூலமான புகார் கொடுத்தேன். அந்த புகார் அ.சா.ஆ1. மேற்படி உள்ளாட்சி தேர்தலில் ஓட்டப்பிடாரத்தைச் சார்ந்த 1ம் எதிரியின் மனைவி லதாவும், அவரை எதிர்த்து முப்புலிவெட்டி கிராமத்தைச் சார்ந்த அம்மாசி மகன் இளையராஜா ஆகியோர் தலைவர் பதவிக்கு போட்டியிட்டார்கள். சம்பவம் மாலை சுமார் 5.30 மணியளவில் நடந்தது. என் தகப்பனாருக்கு தலையில்தான் வெட்டுக்காயங்கள் ஏற்பட்டது. சம்பவத்தை சுடலை என்ற துரை பார்த்தார். வேறு யார் பார்த்தார்கள் என்று நான் கவனிக்கவில்லை. நான் பூத்தில் இருக்கும்போது மாறி மாறி வெட்டிக் கொண்டதாக கேள்விப்பட்ட சம்பவம் குறித்து வழக்கு தாக்கல் செய்யப்பட்டதா என்றால் எனக்கு தெரியாது. சம்பவத்தில் 4,5,8 எதிரிகள் பயன்படுத்திய அரிவாளகள் சா.பொ.1 முதல் 3, சம்பவத்தில் 3,6,7 எதிரிகள் பயன்படுத்திய கம்புகள் சா.பொ.4 முதல் 6. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

சா.பொ.1 முதல் 6 ஆயுதங்கள் எங்கும் கிடைக்கக்கூடிய பொருட்கள் என்றால் சரிதான். 27.12.2019 அன்று தேர்தல் சம்பந்தமாக சிவன் கோவில் முன்பாக கூட்டம் நடந்ததாக அ.சா.ஆ1–ல் நான் சொல்லவில்லை. மேற்படி கூட்டம் வட்டாட்சியர் அலுவலகத்தில் நடந்ததாக போலீஸ் விசாரணையில் சொன்னேனா என்றால் ஞாபகம் இல்லை. அப்படி ஒரு கூட்டம் நடைபெறவில்லை என்றும், அந்த கூட்டத்தின் அடிப்படையில் 5ம் எதிரிக்கும், பச்சைப்பெருமாள் என்பவருக்கும் வாய்த்தகராறு நடைபெறவில்லை என்றும், அதனடிப்படையில் நான் என் தகப்பனாரை எச்சரித்ததாக சொல்வதும் பொய் என்றும் சொன்னால் சரியல்ல. மேற்படி இளையராஜா ஒரு பிரதான அரசியல் கட்சி பிரமுகர் என்றால்சரிதான். 1ம் எதிரியின் மனைவி சுயேட்சையில் நின்றார் என்றால் சரிதான். 1ம் எதிரியின் மனைவிக்கு எதிராக இளையராஜா போட்டியிட்டாரா என்றால் சுயேட்சையில் நின்ற அனைவரும் 1ம் எதிரியின் மனைவிக்கு எதிராக போட்டியிட்டார்கள். அதனால் இளையராஜாவிற்கும் 1ம் எதிரியின் வகையறாவுக்கும் பிரச்சனை இருந்தது. நான் பிபிஏ படித்துள்ளேன். காலை 7 மணியளவில் வாக்கு பதிவு அன்று மேற்படி பூத்திற்குள் சென்றேன். சுமார் 6 வரையில் வாக்குபதிவு நடந்தது. எத்தனை மணிக்கு எவ்வளவு ஓட்டு பதிவானது என்பதை மணிக்கணக்கில் நாங்கள் குறிப்பு எடுப்போம் என்றால் சரிதான். அசாஆ1–ஐ நான் என் கைப்பட காவல்நிலையத்தில் வைத்து எழுதினேன். அதில் அன்று மாலை 4 மணியளவில் நான் பூத்தில் இருந்தபோது இருதரப்பாரும் முன்னதாக ஒருவருக்கொருவர் வெட்டிக் கொண்டு மருத்துவமனைக்கு சென்றிருப்பதாக கேள்விப்பட்டதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். நான் உடனே பதற்றத்துடன் வெளியே வந்து என் தகப்பனாரை தேடிப்போனேன் என்று குறிப்பிட்டுள்ளேன். நான் மருத்துவமனைக்கு சென்றபோது என் தகப்பனார் மருத்துவமனைக்கு வெளியே நின்று கொண்டிருந்தபோது ஏற்கனவே நடந்த சம்பவத்தில் காயம்பட்டு மருத்துவமனைக்கு வந்த 1 முதல் 3 எதிரிகளும் அங்கு அரிவாள்களுடன் வந்தார்களா என்றால் ஆமாம். அசாஆ1 படி சம்பவ நேரம் மாலை 4.30 மணி இருக்கும் என்று எழுதிக் கொடுத்துள்ளேன். சம்பவத்தை கண்ணுற்ற சாட்சிகள் பெயரை அசாஆ1–ல் நான் சொல்லவில்லை என்றால் பதற்றத்தில் சொல்லவில்லை. கோவில்பட்டி நீதித்துறை நடுவர் முன்பாக நான் ஒரு ரகசிய வாக்குமூலம் கொடுத்தேன். என் தகப்பனார் கொலை பற்றி வாக்குமூலம் கொடுத்தேன். எதிரிகள் பற்றியும் அவர்களது குற்றச்செயல்கள் பற்றியும் நான் மேற்படி வாக்குமூலத்தில் சொல்லிவிட்டு அங்கிருந்து எதிரிகள் சென்றுவிட்டதாகவும் சொல்லிவிட்டு "அதன் பிறகு எனது அப்பாவை தேடி நான் அவரது பின்னால் ஓடும்போது நான் செல்வதற்குள் சம்பவம் நடந்து

முடிந்துவிட்டது என்றும் நான் அங்கிருந்தபோதே தகவல் அறிந்து காவல் ஆய்வாளர்கள் அங்கு வந்துவிட்டதாகவும், அதன்பின்பு நான், எனது தாயாருக்கும், என் அக்காவிற்கும் தகவல் சொல்லி அவர்கள் வந்த பிறகு இரவு 7 மணியளவில் காவல்நிலையம் சென்று புகார் கொடுத்தேன்" என்று ரகசிய வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். யாரோ தகவல் கொடுத்து காவல்துறையினர் அங்கு வந்து விட்டார்கள் என்றால் தவறு. தேர்தல் பணியில் பாதுகாப்பில் ஈடுபட்டிருந்த போலீசார் அந்த பகுதியில் வந்து சென்று கொண்டிருந்ததால் சம்பவ இடத்திற்கு வந்திருந்தார்கள். அந்த விபரத்தை ரகசிய வாக்குமூலத்திலும், போலீஸ் விசாரணையிலும் சொன்னேனா என்றால் ரகசிய வாக்குமூலத்தில் சொன்னேன். ஆய்வாளர் விசாரணையில் சொன்னேனா என்பதை மறந்துவிட்டேன். சம்பவ சமயத்தில் என் தகப்பனாருக்கு சுமார் 55 வயதிருக்கும். 4 முதல் 8 எதிரிகள் உத்தேசமாக 38 முதல் 45 வயதிற்கு உட்பட்டவர்கள் என்றால் சரிதான். என் தகப்பனார் உடல் கிடந்த இடம் மருத்துவமனையிலிருந்து சுமார் 100 கி.மீ தூரத்தில் இருக்கும். என் தகப்பனாரை 4 முதல் 8 எதிரிகள் மடக்கியிருந்தால் சம்பவம் 30 அடிக்குள் நடந்திருக்கும் என்றால் சரியல்ல. முதல் சம்பவத்தில் கொடுங்காயம் அடைந்ததால் 1ம் எதிரியும், 2, 3 எதிரிகளும் தங்கள் காயங்களுக்காக அன்று மாலை 5.10 மணியளவில் ஓட்டப்பிடாரம் அரசு மருத்துவமனையிலிருந்து கிசிச்சை பெற்று தூத்துக்குடி அரசு மருத்துவமனைக்கு அனுப்பிவிட்டார்கள் என்றால் எனக்கு தெரியாது. தூத்துக்குடி அரசு மருத்துவமனையில் 1ம் எதிரி 28 நாட்களும், 2ம் எதிரி 10 நாட்களும் உள்நோயாளியாக கிசிச்சை எடுத்துக் கொண்டார்கள் என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. என் தகப்பனாரை நான் தொட்டு பார்த்து தூக்கி பார்த்தேன். என் உடைகளில் ரத்தக்கறை படிந்தது. அந்த உடைகளை போலீசார் கைப்பற்றவில்லை. ஓட்டப்பிடாரத்தில் 10 வாக்குச்சாவடிகளில் வாக்குபதிவு நடந்தது என்றால் 3 வாக்குச்சாவடிகளில் வாக்கு பதிவு நடந்தது. ஊராட்சி மன்ற உறுப்பினர், தலைவர், ஒன்றிய கவுன்சிலர், மாவட்ட கவுன்சிலர் ஆகிய பதவிகளுக்கு தேர்தல் நடந்தது என்றால் சரிதான். அரசியல் கட்சிகள், சுயேட்சைகள் அனைவரும் போட்டியிட்டார்கள் என்றால் சரிதான். அந்த தேதியில் பல இடங்களில் தேர்தல் கலவரங்கள் நடந்தது என்றால் சரிதான். சாட்சி மீண்டும் மேட்டுர்பகுதியில் முதலில் கலவரம் நடந்து வெட்டுகுத்து ஆனது என்று கூறுகிறார். பல இடங்களில் நடந்த கலவங்களில் ஒரு கலவரத்தில் என் தகப்பனாரும் தாக்கப்பட்டார் என்றால் சரியல்ல. சாட்சி மீண்டும் ஒரு இடத்தில்தான் கலவரம் நடந்து என்று கூறுகிறார். மேட்டுர் பூத் கலவரத்தில் இரு தரப்பினர் மீதும் இதச பிரிவு 307-ன் படி வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். ஒரு வழக்கில் பச்சைப் பெருமாள் புகார்தாரர். மற்றொரு தரப்பில் 1ம்

எதிரி புகார்தாரர். நான் முதல் விசாரணையில் சொன்ன நேரத்திலும், சொன்னவிதத்திலும் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. நான் பூத்தில் பணியில் இருந்ததாகவும், ஓட்டப்பிடாரம் அரசு மருத்துவமனைக்கு சென்றதாகவும் பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. பூத் பணிக்காக கொடுக்கப்பட்ட அடையாள அட்டையை ஆய்வாளர் என்னிடம் கேட்டு வாங்கிக் கொண்டார். 3 வழக்குகளிலும் போலீசார் நிலையத்திலேயே அமர்ந்து கொண்டு அவர்கள் விருப்பம்போல ஆவணங்களை தயாரித்துக் கொண்டார்கள் என்றால் உண்மையல்ல. அசாஆ1 சங்கதிகளுக்கும், என் சாட்சியத்திற்கும் ஆய்வாளர் விசாரணையில் கொடுத்த வாக்குமூலத்திற்கும் ஏராளமான முரண்பாடுகள் உள்ளன என்றால் சரியல்ல. இளையராஜாவின் தூண்டுதலின்பேரில் பொய் புகார் கொடுத்து பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down before me in open court, in the presence of the Accused read over to the witness and admitted by the deponent to be correct

I Additional District& Sessions Judge,
Thoothukudi.

DEPOSITION OF WITNESS

IN THE COURT OF I ADDL.DISTRICT & SESSIONS JUDGE, THOOTHUKUDI.

Case No. S.C.No.301/2020.

Prosecution witness for P.W.2.

| | | | |
|---|---|---|---|
| Name | ... திரு. சுடலை. | Caste | ... |
| Father's/Husband Name | ... | Calling | ... |
| Village | ... | Religion | ... |
| Taluk | ... | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 09.09.2024.

A6 died. Others present.

<u>முதல் விசாரணை</u>

நான் தற்போது ஓட்டப்பிடாரத்தில் குடியிருந்து விவசாயம் செய்து வருகிறேன். அசா1-ஐ தெரியும். அவரது தகப்பனார் மாரியப்பனை தெரியும். ஆஜர் எதிரிகளை தெரியும். வழக்கு பற்றி எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி விசாரணை செய்ய அரசு தரப்பில் அனுமதி கேட்டு அனுமதி வழங்கப்பட்டது. சாட்சி மேற்கொண்டு விசாரணை செய்யப்படுகிறார்.

போலீசார் என்னை விசாரித்தார்கள் என்றும், போலீஸ் விசாரணையில் 30.12.2019 அன்று உள்ளாட்சி தேர்தலுக்காக போட்டியிடுவதற்காக 27.12.2019 அன்று சிவன்கோவில் முன்பாக ஓட்டப்பிடாரத்தில் ஒரு கூட்டம் நடந்ததாகவும், அதில் 1ம் எதிரியின் மனைவிக்கு எதிராக இளையராஜா என்பவருக்கு அசா1-ன் தகப்பனார் சப்போர்ட் செய்ததாக 1ம் எதிரி அசா1-ன் தகப்பனாரை கொலை மிரட்டல் விடுத்தாகவும், அது குறித்து மேற்படி மாரியப்பன் அசா1-னிடம் சொல்ல அசா1 இளையராஜாவிற்கு சப்போர்ட் செய்யும் நபர்களை 1ம் எதிரி தரப்பில் உள்ள நபர்கள் கொலை செய்யப்போவதாக எச்சரித்தாகவும், பின்னிட்டு 30.12.2019 அன்று 5 மணியளவில் மேற்படி மாரியப்பனுடன் நான் ஓட்டப்பிடாரம் அரசு மருத்துவமனைக்கு சென்றதாகவும், அங்கிருந்த ஆஜர் எதிரிகள் 1ம் எதிரி சொன்னவுடன் மற்ற எதிரிகள் அரிவாள் மற்றும் கம்பு ஆகியவற்றால் மாரியப்பனை தாக்கி கொடுங்காயம் ஏற்படுத்தியதாகவும், நான் அருகில் இருந்து சம்பவத்தை பார்த்ததாகவும் சொல்லியுள்ளேன் என்றும், பின்னிட்டு அசா1 புகார் கொடுப்பதற்காக காவல்நிலையம் சென்றுவிட்டதாகவும் சொல்லியுள்ளேன் என்றும், என்னுடன் சாட்சிகள் பரமசிவன் மற்றும் கோபாலகிருஷ்ணன் ஆகியோரும் சம்பவ இடத்தில் இருந்ததாகவும் சொல்லியுள்ளேன் என்றும் சொன்னால் சரியல்ல. தற்போது எதிரிகளுக்கு பயந்துகொண்டு பொய் சாட்சி சொல்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல.

Taken down before me in open court, in the presence of the Accused read over to the witness and admitted by the deponent to be correct

I Additional District& Sessions Judge,
Thoothukudi.

DEPOSITION OF WITNESS

IN THE COURT OF I ADDL.DISTRICT & SESSIONS JUDGE, THOOTHUKUDI.

Case No. S.C.No.301/2020.

Prosecution witness for P.W.3.

| | | | |
|---|---|---|---|
| Name | ... திரு. பரமசிவன். | Caste | ... |
| Father's/Husband Name | ... | Calling | ... |
| Village | ... | Religion | ... |
| Taluk | ... | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 09.09.2024.

A6 died. Others present.

முதல் விசாரணை

நான் தற்போது ஓட்டப்பிடாரத்தில் குடியிருந்து தூத்துக்குடியில் சலவை தொழில் செய்து வருகிறேன். அசா1–ஐ எனக்கு தெரியாது. இறந்துபோன மாரியப்பனை எனக்கு தெரியாது. ஆஜர் எதிரிகளை தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி விசாரணை செய்ய அரசு தரப்பில் அனுமதி கேட்டு அனுமதி வழுங்கப்பட்டது. சாட்சி மேற்கொண்டு விசாரணை செய்யப்படுகிறார்.

போலீசார் என்னை விசாரித்தார்கள் என்றும், போலீஸ் விசாரணையில் 30.12.2019 அன்று 5 மணியளவில் நான் ஓட்டப்பிடாரம் மருத்துவமனை முன்பாக நின்று கொண்டிருந்ததாகவும், அப்போது கிசிச்சைக்காக வந்த 1ம் எதிரி மற்றும் அவருடன் வந்த 2 முதல் 8 எதிரிகள் மேற்படி மாரியப்பனை 1ம் எதிரி சொல்ல மற்ற எதிரிகள் அரிவாள் மற்றும் கம்புகளால் தாக்கியதாக சொல்லியுள்ளேன் என்றும் அப்போது என்னுடன் கோபாலகிருஷ்ணன் என்பவர் இருந்ததாகவும் சொல்லியுள்ளேன் என்றும், அசா2 என்னுடன் இருந்ததாகவும் சொல்லியுள்ளேன் என்றும், தற்போது எதிரிகளுக்கு பயந்துகொண்டு பொய் சாட்சி சொல்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல.

Taken down before me in open court, in the presence of the Accused read over to the witness and admitted by the deponent to be correct

I Additional District& Sessions Judge,
Thoothukudi.

DEPOSITION OF WITNESS

IN THE COURT OF I ADDL.DISTRICT & SESSIONS JUDGE, THOOTHUKUDI.

Case No. S.C.No.301/2020.

Prosecution witness for P.W.4.

| | | | |
|---|---|---|---|
| Name | ... திரு. கோபாலகிருஷ்ணன். | Caste | ... |
| Father's/Husband Name | ... | Calling | ... |
| Village | ... | Religion | ... |
| Taluk | ... | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 09.09.2024.

A6 died. Others present.

முதல் விசாரணை

நான் தற்போது ஓட்டப்பிடாரத்தில் குடியிருந்து பால் வியாபாரம் செய்து வருகிறேன். அசா1–ஐ எனக்கு தெரியாது. இறந்துபோன மாரியப்பனை எனக்கு தெரியாது. ஆஜர் எதிரிகளை தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி விசாரணை செய்ய அரசு தரப்பில் அனுமதி கேட்டு அனுமதி வழங்கப்பட்டது. சாட்சி மேற்கொண்டு விசாரணை செய்யப்படுகிறார்.

போலீசார் என்னை விசாரித்தார்கள் என்றும், போலீஸ் விசாரணையில் 30.12.2019 அன்று 5 மணியளவில் நான் ஓட்டப்பிடாரம் மருத்துவமனை முன்பாக நின்று கொண்டிருந்ததாகவும், அப்போது கிசிச்சைக்காக வந்த 1ம் எதிரி மற்றும் அவருடன் வந்த 2 முதல் 8 எதிரிகள் மேற்படி மாரியப்பனை 1ம் எதிரி சொல்ல மற்ற எதிரிகள் அரிவாள் மற்றும் கம்புகளால் தாக்கியதாக சொல்லியுள்ளேன் என்றும் அப்போது என்னுடன் அசா2 மற்றும் 3 ஆகியோர் இருந்ததாகவும் சொல்லியுள்ளேன் என்றும், தற்போது எதிரிகளுக்கு பயந்துகொண்டு பொய் சாட்சி சொல்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல.

Taken down before me in open court, in the presence of the Accused read over to the witness and admitted by the deponent to be correct

I Additional District& Sessions Judge,
Thoothukudi.